பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

22 03 2023 12 40

புதன்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. யுகாதி, நவ்ரே உள்ளிட்ட புத்தாண்டு பண்டிகைகள் இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

2. உலக தண்ணீர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

3. மீனவர்களின் பயன்பாட்டிற்காக **Treat my fish** செயலி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா தெரிவித்துள்ளார்.

4. கோவையில் மத்திய அரசின் பணியாளர்களுக்கான மருத்துவ நலவாழ்வு மையத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா காணொலி வாயிலாக இன்று திறந்து வைத்தார்.

5. இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி, இன்று சென்னையில் நடைபெறுகிறது.

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ---

**[]<<<>>>[]**

யுகாதி பண்டிகை இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

உலகம் முழுவதும் உள்ள தெலுகு மற்றும் கன்னட மொழி பேசும் மக்கள் இந்நாளை கொண்டாடி வருகின்றனர்.

இந்நாளில் அறுசுவை உணவு வகைகள் பரிமாறப்படுகிறது.

குடிபத்வா, செட்டி சந்த், நவ்ரே, சைத்ரா சுக்லா, சஜிபு என பல்வேறு பெயர்களில் நாட்டின் பல மாநிலங்களில் இன்று புத்தாண்டு பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த பண்டிகைகளையொட்டி தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

உலக தண்ணீர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1993-ஆம் ஆண்டு முதல் நீர் வளத்தை பாதுகாப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் ஐ நா இந்த நாளை அறிவித்தது.

2030-ஆம் ஆண்டுக்குள் உலகில் வாழும் அனைவருக்கும் தண்ணீர் வசதி மற்றும் சுகாதார வசதியை கிடைக்கச் செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

அனைத்து நாடுகளும் இதனை முக்கிய இலக்காகக் கொண்டு நீர்வளத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

பிரதமர் திரு நரேந்திரமோடி-யின் தலைமையில் நீர்வள பாதுகாப்பு இயக்கம், கங்கை பாதுகாப்புத் திட்டம், தேசிய நீர் மேலாண்மை திட்டம், நீர்வள ஆதாரங்கள் கண்டுபிடிப்பு மற்றும் நிர்வாகத் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நிலத்தடி நீரை புதுப்பிப்பதற்கும், ஏற்கனவே உள்ள நீர் ஆதாரங்களை பாதுகாப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இம்மாதம் 21-ஆம் தேதி வரை நாடு முழுவதும் 11 கோடியே 49 லட்சம் குடியிருப்புகளுக்கு குழாய்கள் மூலம் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2014-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் இதுவரை நாடு முழுவதும் 11 கோடி வீடுகளுக்கு தனி கழிவறை வசதி செய்யப்பட்டுள்ளதாக அரசு கூறியுள்ளது.

இந்நாளையொட்டி தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில், அனைவருக்கும் உயிர் நாடியான தண்ணீரை பாதுகாக்க வேண்டுமென்றும், தண்ணீரை வீணாக்காமல் தூய்மையாக வைக்க வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

நீர்நிலைகளை தூர்வாரி மாசுபடாமல் பாதுகாக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.,

இந்நாளையொட்டி தமிழகத்தில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

தண்ணீரின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் விழிப்புணர்வு பேரணிகளும் நடைபெற்றன.

சேலம் மேட்டூர் அணையின் நீர் சேமிப்பு மக்களுக்கு மிகுந்த பயனளிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) -36-- செகண்ட்*

**[]<<<>>>[]**

பீகார் மாநிலம் உருவான 111-வது ஆண்டு விழா இன்று கொண்டாடப்படுகிறது.

1912-ஆம் ஆண்டு மார்ச் 22-ஆம் தேதி மேற்குவங்கத்திலிருந்து பிரித்து பீகார் உருவாக்கப்பட்டது.

இந்நாளையொட்டி அம்மாநிலம் முழுவதும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நாளையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திரமோடி ஆகியோர் அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில், புனிதர்களான மகாவீரர், கௌதம புத்தர் மற்றும் குரு கோவிந்த்சிங் ஆகியோர் இந்த மாநிலத்துடன் தொடர்புடையவர்கள் என்ற கூறியுள்ளார்.

பீகார் மக்கள் கடினமாக உழைக்கும் குணமுடையவர்கள் என்றும், அவர்களின் திறனை பயன்படுத்தி வளர்ச்சிக்கான புதிய வழியை உருவாக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத் துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் விடுத்துள்ள செய்தியில், நாட்டின் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த மாநிலமாகவும், கலாச்சாரம் மற்றும் சிறப்பான உணவு வகைகளை கொண்டுள்ளதாகவும் பீகார் விளங்குவதாகக் கூறியுள்ளார்.

இந்த மாநிலம் வளர்ச்சி மற்றும் செழுமையை பெறும் வகையில் அனைவரும் உழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.,

அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியா வலிமையான இடத்தைப் பெறுவதற்கு பீகார் மாநிலத்தின் வளர்ச்சி மிகவும் முக்கியம் என்று அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், ஆழமான, செழுமைமிக்க வரலாற்றையும், பாரம்பரியத்தையும் கொண்டுள்ள பீகார் மக்கள் அனைத்துத் துறையிலும் ஒப்புயர்வற்ற வகையில் பங்காற்றி வருவதாக பாராட்டு தெரிவித்துள்ளார்.

கடின உழைப்புக்கும், அர்ப்பணிப்புக்கும் பெயர் பெற்ற பீகார் மக்கள் சிறப்புத்தன்மை வாய்ந்தவர்கள் என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்தின், கோவை ரயில் நிலையம் அருகே மத்திய அரசின் பணியாளர்களுக்கான மருத்துவ நலவாழ்வு மையத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா காணொலி வாயிலாக இன்று திறந்து வைத்தார்.

அப்போது பேசிய அவர், மத்திய அரசு ஊழியர்கள் பயன்பெறும் வகையில் அனைத்து வகையான சிகிச்சையும், மருந்துகளும் கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இந்திய மருத்துவம் மற்றும் யுனானி சிகிச்சை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மீனவர்களின் பயன்பாட்டிற்காக விரிவான தகவல்கள் அடங்கிய **Treat my fish** செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், மீன்வர்களுக்கு ஏற்படும் நோய்கள் குறித்தும், அதனை சரி செய்வதற்கான வழிமுறைகள் குறிததும் மீனவர்கள் இந்த செயலி மூலம் விளக்கங்களை கேட்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.,

பிரதமரின் மீன்வள திட்டத்தின் கீழ் ஆறாயிரம் ஹெக்டேர் கடல் மற்றும் நன்னீர் பரப்பில் மூன்று கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்,

மீனவர்களுக்கான காப்பீட்டு திட்டமும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாக திரு பர்ஷோத்தம் ரூபாலா குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

நாட்டில் கரீப் மற்றும் ரஃபி பருவத்தில் சாகுபடி செய்யப்படும் 22 வகையான உணவு தானியங்கள் மற்றும் வர்த்தக பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை 50 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு நரேந்திரசிங் தோமர் கூறியுள்ளார்.

மக்களவையில் எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில் இதனை தெரிவித்த அவர், விவசாயிகள் பயன்பெறும் வகையில் பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டம், வேளாண் அடையாள அட்டை, பயிர் பாசன திட்டம், அறுவடைக்குப் பிந்தைய கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டம் போன்றவை செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

மாறிவரும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ப பயிர் சாகுபடி செய்வதற்கான ஆலோசனைகளையும் அரசு வழங்கி வருவதாகக் அவர் தெரிவித்தார்.

பூச்சிகளின் தாக்குதலிலிருந்து பயிர்களை காப்பதற்கு ட்ரோன் மூலம் மருந்துகள் தெளிக்கப்பட்டு வருவதா திரு நரேந்திரசிங் தோமர் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் ஜி-20 நாடுகளின் நீடித்த வளர்ச்சிக்கான இரண்டாவது நிதி பணிக்குழுக் கூட்டத்தின் இரண்டாம் நாளான இன்று சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான திட்டங்களுக்கு நிதி ஆதரவு திரட்டுவது தொடர்பான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சர்வதேச அளவில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்கள் குறித்தும், அதனை செயல்படுத்துவதற்குத் தேவைப்படும் நிதி குறித்தும் ஜி-20 நாடுகளின் பிரதிநிதிகளும், சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளும் தங்களது கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

சுற்றுச்சூழல் தொடர்பான அறிக்கைகளும், எதிர்காலத்தில் கார்பன் பதிவுகளை குறைப்பது தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத்தில் 90 பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

பிரஸார் பாரதியின் டிடி தொலைக்காட்சி மூலம் 51 கல்விச் சேனல்கள் உட்பட 160 சேனல்கள் ஒளிபரப்பப்பட்டு வருவதால் தரைவழி ஒளிபரப்பு சேவைகள் குறைக்கப்பட்டு வருவதாக மத்திய தகவலி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் கூறியுள்ளார்.

மக்களவையில் எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுவரை தூர்தர்ஷனின் ஆயிரத்து 300 தரைவழி ஒளிபரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எல்லைப்பகுதியில் உள்ள நிலையங்களில் தரைவழி ஒளிபரப்பு தொடர்வதாக அமைச்சர் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி, இன்று சென்னையில் நடைபெறுகிறது.

சென்னை எம் ஏ சிதம்பரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இந்த போட்டி, பிற்பகல் மணி 1-30-க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று சமநிலையில் உள்ளன.

***End of News***